**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - 2014**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டத்தின் செயற்திட்டத்தின் 2014 பெப்ரவரி 13 முதல் 2014 திசெம்பர் 31 இல் வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 திசெம்பர் 23 மற்றும் 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதிய பிரிவு 01 இற்கான பிபீசீ இல (2014) 27 மொத்த இல (321), பிரிவு 03 இற்கான ஜீசீஎல் இல (2014) 17 மொத்த இல (520), மற்றும் பிரிவு 04 இற்கான ஜீசீஎல் இல (2014) 18 மொத்த இல (521) ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் படி, நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. அம்பாந்தோட்டை சர்வதேச அபிவிருத்தி மைய செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்கு உதவியளித்தலிற்கும் வசதியளித்தலுற்குமாக வீதி இணைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டைக்கு தென்பகுதி அதிவேக வீதியை 96 கிலோமீற்றர் நீளத்தில் விரிவாக்கம் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக இனங்காணப்பட்டது. முன்மொழியப்பட்ட தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல மாத்தறையிலிருந்து பெலியட்ட, பெலியட்டவிலிருந்து வெட்டிய, வெட்டியவிலிருந்து அன்டரவெவ, மத்தலையிலிருந்து ஹம்பாந்தோட்டை என நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. கடன் ஒப்பந்தத்தின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 1,469 மில்லியனுக்கு சமமான ரூபா 187,010 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 1,348 மில்லியனுக்கு சமமான ரூபா 171,518 தொகை சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 பெப்ரவரி 13 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 செப்தெம்பர் 15 அளவில் முதலாவது பகுதியும் 2019 திசெம்பர் 22 அளவில் இரண்டாவது பகுதியும் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. ஏனைய பகுதிக்கான பூர்த்தியாக்கல் திகதி இதுவரையில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீதுதெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறானசெவ்வையினையும் அப் பரிசோதனைஉள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவீனங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதிஅறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கைஅரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்,கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2014 பெப்ரவரி 13 முதல் 2014 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 1,348 | 171,518 | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 121 | 15,492 | 144.7 | 70 | 70 |
| மொத்தம் | 1,469 | 187,010 | 144.7 | 70 | 70 |

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் உள்நாட்டு வர்த்தக வங்கயொன்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 96 மில்லியன் தொகையான தனிப்பட்ட கடனின் பெறுவனவுகள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது. எனினும் கடனின் மீளளிப்பு தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக செயலாற்றல்

சுற்றாடல் விளைவு மதிப்பாய்வு, சாத்திய வள கற்கைகள், நில சுவீகரிப்பு போன்ற நடவடிக்கைகள் மீளாய்வாண்டின்போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் வீதி நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறிப்பிட்ட கால எல்லையினுள் செயற்திட்டத்தின் வெற்றிகரமான அமுல்படுத்தலை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முழுமையான விபரமான திட்டம் மற்றும் வருடாந்த நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறான திட்டங்கள் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமால் செயற்திட்டத்தால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய பதவியணியினருக்கு சுற்றாடல் விளைவு மதிப்பாய்வு மற்றும் சாத்திய வள கற்கைகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 4.75 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய நடவடிக்கைகள்

செயற்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து 50 வாகனங்களை வாடகைக்கமர்த்தியிருந்ததுடன் கொள்வனவு நடைமுறைகளின் போது தகுதியான ஈடுபாடுள்ள தரப்பினருக்கு நியாயமான மற்றும் சமமான சந்தர்ப்பங்களை வழங்காமல் அது தொடர்பில் மீளாய்வாண்டின் போது ரூபா 23 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.